# 10

# வேதாகமத்தில் தேவனுடைய நோக்கம்

"கர்த்தராகிய இயேசுவின் நாமத்தில்" சில விஷயங்களைச் செய்தல் என்பது, அவர் அங்கீகரித்து இருப்பவற்றைச் செய்தல் என்று அர்த்தப்படுகிறது. நாம் செய்யும் எதுவும் இயேசுவின் அதிகார வரம்புகளுக்குப் புறம்பே இருப்பதில்லை.

இயேசுவின் வசனம் ஒவ்வொரு செயலைப் பற்றியும் *வெளிப்படையாக* (நேரடியாக) பேசியிராத போது நாம் எவ்வாறு *எல்லாவற்றையும்* அவரது அதி காரத்தினால் செய்ய முடியும்? நாம் வேதாகமரீதியான கொள்கைகளினால் வழிநடத்தப்படவேண்டும். இயேசுவின் போதனையானது வாழ்வின் எல்லாப் பகுதிகளுக்கும் ஏற்புடையதாக உள்ளது. இன்றைய நாட்களில் மக்கள் வாழும் வாழ்வின் வகையினுடைய பாகமாயிருக்கும் ஒவ்வொரு விஷயம் பற்றியும் வேதாகமம் வெளிப்படையாகக் குறிப்பிடுவதில்லை என்பதால், வாழ்வின் எல்லாப் பகுதிகளுக்கும் கிறிஸ்துவின் வசனம் நடைமுறைப்படுகிறது என்பதை நாம் எவ்வாறு விசுவாசிக்கிறோம் என்று காண்பித்தாக வேண்டும்.

வேதாகமத்தைப் போதிப்பவர்களில் பலர், தங்கள் மாணவர்களுக்குத் தங்களின் தர்க்கத்தை விளக்கப்படுத்துவதில்லை. ஒரு போதகர், தாம் போதிக்கும் ஒவ்வொரு வேளையிலும், தமது முன் அனுமானங்கள் யாவற்றையும் பட்டியலிட்டு தமது சிந்தனையின் செயல்முறையினுடைய விபரங்கள் யாவற்றையும் தர இயலாது என்பது உண்மையே. இருப்பினும் ஒரு போதகர், தமது மாணவர்கள் தர்க்க செயல்முறையைப் புரிந்துகொள்கின்றனர் என்று யூகித்துக் கொள்பவராகவும் தமது முடிவுகளைத் தாம் அடைந்தது எவ்வாறு என்று எந்த விளக்கத்தையும் ஒருக்காலும் தராதவராகவும் இருக்கும்போது தீவிரமான பிரச்சனை ஒன்று விளைகிறது. இந்தத் தோல்வியானது, சிலர் நல்லதொரு வேதாகமப் படிப்பிற்கான படிநிலைகளை ஒருக்காலும் கற்பதில்லை என்று அர்த்தப்படுகிறது. இது உண்மையில் போதகர் தமது மாணவர்கள் படிநிலைகளைப் புரிந்துகொண்டனர் என்றும் எனவே அவற்றை விவரித்துரைக்கத் தேவையில்லை என்றும் யூகித்திருக்கையில், மாணவர்கள் தங்கள் போதகர் தமது சிந்தையில் தர்க்கரீதியற்ற தாண்டுதல்களை ஏற்படுத்தி யிருக்கிறார் என்று நம்பி, தாங்கள் கேள்விப்படும் சில முடிவுகளைப் புறக்கணிக்கின்றனர் என்றும் அர்த்தப்படலாம். போதகர்கள், தங்கள் மாணவர்கள் தர்க்கரீதியான முடிவுகளுக்கான படிநிலைகளைக் கற்றுக்கொள்ள உதவுவதற்காக, தங்கள் தர்க்கம் பற்றி அடிக்கடி போதுமான அளவு விளக்கம் தரும்படி அறிவுறுத்தப்படுகின்றனர்.

வேதாகமப் படிப்பின் செயல்முறையில் தர்க்கரீதியான படிநிலைகளைப் பின்பற்றுதல் முக்கியமானதாக உள்ளது. இது, வேதாகமம் போதிப்பது என்ன

என்பது பற்றிய சரியான முடிவுகளை அடைவதற்கு நமக்கு உதவுவது மட்டு மின்றி, அந்த முடிவுகளைப் பற்றிய மேன்மையான புரிந்து கொள்ளுதலையும் நமக்குக் கொண்டுவருகிறது. அந்தக் காரணத்தினால் நாம், வேதாகமப் படிப்பின் அடிப்படையான ஆனால் அடிக்கடி காணாது விடப்பட்டிருக்கக்கூடிய சில கொள்கைகளைப் பரிசீலனை செய்ய நேரம் எடுத்துக்கொள்வோம்.

## வேதாகமத்தின் நோக்கத்தின் மீது மறுசிந்தனை: தேவனை அறிதல்

தொடங்குவதற்கு நாம், வேதாகமம் என்பது தேவனுடைய சித்தத்தை மனிதகுலத்திற்கு வெளிப்படுத்தும் புத்தகமாக உள்ளது என்ற உரிமை கோருதலை நாம் ஏற்றுக்கொள்வது ஏன் என்பது பற்றிச் சிந்திப்போமாக, கிறிஸ்தவர்கள் என்ற வகையில் நாம், இதை யூகித்து ஏற்றுக்கொண்டு இந்த எழுத்துக்களின் மீதான நமது படிப்பிற்குக் கடந்து செல்கிறோம்.

ஒரு வேளை, ஏற்கனவே இதை நம்பியிராத ஒருவருக்கு இந்த யூகத்தைப் பற்றி விளக்கம் தரும்படி நாம் அழைக்கப்படுவதாக வைத்துக்கொள்வோம். அந்த நபர் என்ன செய்யும்படி நாம் அவருக்கு அறிவுறுத்துவோம்? அந்த நபர், வேதாகமம் வேறு எந்தப் புத்தகத்தையும் போன்றது அல்ல என்று தமக்குத்தாமே காணும்படி செய்தலுக்கான அணுகுமுறையே அந்த நபருக்கு நாம் செய்யக்கூடிய நீடிய செயல்விளைவை ஏற்படுத்தும் உதவியாக இருக்கும். அவர் வேதாகமத்தையே ஆராயும்படி உதவி செய்வதினால் இதை நாம் செய்ய முடியும். அது மனித தொடக்கத்தைக் கொண்ட புத்தகமாக இருக்க முடியாது என்று காண்பிக்க, நாம் அவரை வேதாகமத்தின் பண்புகளின் பக்கமாகத் திருப்புவோம். அவர் ஒரு புதிரைத் தீர்க்க முயற்சிசெய்வது போன்று சான்றுகளை ஆராய வேண்டும். இந்தப் புத்தகம் - வேறு எந்தப் புத்தகத்தைப் போன்றும் இராது - தேவனிடத்தில் இருந்து வந்துள்ளது என்று காண்பிக்கும் பண்புகளின் மீது கவனம் குவிக்கும்படி அவரை நாம் ஊக்கப்படுத்துவோம்.

தேவன் வேதாகம எழுத்துக்களில் தமது சித்தத்தை வெளிப்படுத்தியது ஏன் என்று கண்டறிய நாம் அதே அணுகுமுறையைப் பயன்படுத்துவோம். வேதாகமம் உண்மையிலேயே தேவனிடத்தில் இருந்து வந்துள்ளது என்று காண்பிக்க நாம் முயற்சி செய்தல் போன்று இதில் செயல்படவேண்டும். தேவன் எவ்வாறு இருக்கிறார் மற்றும் *வேதாகமத்தின் போதனை வழியாக* அவர் என்ன செய்கிறார் என்பவற்றை நாம் கண்டுபிடிக்க முடியுமா என்று காண்பதற்கு, சாட்சிகள் மற்றும் வேதாகமத்தின் போதனை ஆகியவற்றை நாம் ஆராய்வது அவசியமாக உள்ளது. நாம், தேவனுடைய நோக்கங்களை வெளிப்படுத்தும் கூற்றுக்கள் மீது குறிப்பான கவனம் செலுத்த விரும்புவோம். மேலும் நாம், அவர், அந்த நோக்கங்களை அறிவிக்கத் தேர்ந்து கொண்ட வழிமுறைகள் பற்றி உற்றுநோக்கவும் விரும்புவோம்.

*தேவன் தம்மை தாமே வெளிப்படுத்துதல் என்பதே அவர் தமது வசனத்தைக் கொடுத்ததில் அவரது நோக்கமாக இருந்தது* என்று வேதாகமத்தின் பல வசனப்பகுதிகள் காண்பிக்கின்றன. நாம் தேவனுடைய பிரமாணங்களை அறிதலைக் காட்டிலும் அதிகமானவற்றை அறிய வேண்டும் என்று தேவன் விரும்புகிறார்; நாம் *அவரை* அறியவேண்டுமென்று விரும்புகிறார்.[1] எரேமியா

31:31-34ல் தேவன், இஸ்ரவேலுடன் தாம் செய்திருந்த உடன்படிக்கையை இடம் மாற்றும் ஒரு புதிய உடன்படிக்கையை ஏற்படுத்தும் நாள் வரும் என்று வாக்குத்தத்தம் செய்தார். புதிய உடன்படிக்கையானது மக்கள் *தேவனைப் பற்றி அறிய* உதவும் என்று அவர் கூறினார் (காண்க வசனம் 34). கிறிஸ்துவின் மூல மாக ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையே எரேமியா 31ல் குறிப்பிடப்பட்ட புதிய உடன்படிக்கை என்று எபிரெயர் 8:7-13ம் வசனப்பகுதி நமக்குக் கூறுகிறது. மீண்டுமாக *அவரை நாம் அறிதல்* என்பதே அவரது நோக்கம் என்று நமக்குக் கூறப்படுகிறது.

இந்த நோக்கத்தை இன்னும் துரிதமாக நிறைவேற்றவே இயேசு வந்தார். யோவான் 17:1-5ல் அவர், தாம் பிதாவுக்கு மகிமையைச் செலுத்தவும் தமக்குப் பிதாவானவர் கொடுத்திருந்த ஊழியத்தை நிறைவேற்றவும் வந்ததாகக் கூறினார். இதைச் செய்வதற்கான அவரது காரணம் 3ம் வசனத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது: "நித்தியஜீவனைக் கொடுக்கும்பொருட்டு." நித்திய ஜீவனை இயேசு எவ்விதம் விளக்கப்படுத்தினார்? *தேவனையும்* அவர் அனுப்பியுள்ள குமாரனையும் *அறிதலே* நித்திய ஜீவன் என்று அவர் கூறினார்.

இந்த இலக்கைச் சிந்தையில் காத்துக்கொள்ளுதலானது நமக்கு, தேவனு டைய சித்தத்தைப் பற்றிக் கற்றுக்கொள்ளுதலை நாம் சிந்திக்கும்போது நமக்கு உதவுகிறது. அவரது சித்தத்தை நமக்கு வெளிப்படுத்துதலில் அவரது இலக்கை நாம் புரிந்துகொள்ளும்போது, அது அவரைப்பற்றி அறிய நமக்கு உதவுகிறது, அந்தச் செய்தித் தொடர்பை நாம், வெறும் சட்டங்களின் பட்டியல் என்ற வகையில் இன்றி மாறுபட்ட எண்ணப்போக்குடன் அணுகச் சாய்கிறோம். ஆவியானவரால் வெளிப்படுத்தப்பட்ட போதனைகள் "தேவனுடைய சிந்தனைகளுக்குள்" (1 கொரிந்தியர் 2:9-13) உட்கண்ணோக்கை அளிக்கின்றன. ஆவியானவரின் இந்த வார்த்தைகளை நாம் ஏற்றுக்கொள்ளும்போது, நாம் "கிறிஸ்துவின் சிந்தையைக் கொண்டிருக்க" கூடியவர்களாக இருக்கிறோம் (1 கொரிந்தியர் 2:14-16; காண்க பிலிப்பியர் 2:5; கொலோசெயர் 3:1, 2).

தேவன் தம்மைப் பற்றி நாம் அறியவேண்டும் என்று விரும்புகிறார் (யோவான் 17:3). நாம், "தம்முடைய பரிசுத்தத்துக்கு நாம் பங்குள்ளவர்களாக" வேண்டும் என்றும் (எபிரெயர் 12:10) "அதரிசனமான தேவனுடைய தற்சுரூப"மாயுள்ள (கொலோசெயர் 1:15), "தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருக்க" (ரோமர் 8:29; காண்க 2 கொரிந்தியர் 3:18) வேண்டும் என்றும் தேவன் விரும்புகிறார். தேவனுடைய தனிப்பட்ட இயல்புக்குள்ளான இந்த உட்கண்ணோக்குகள் நாம் அவரைப் பற்றி அறியவர நமக்கு உதவுகின்றன.

## தேவன் தமது நோக்கத்தை வேதவசனங்களில் எவ்வாறு நிறைவேற்றுகிறார்

வேதாகமம் (சட்டங்களைப் பட்டியலிடும் பகுதிகளைக் கொண்டிருந்தாலும்) முதன்மையான சட்ட புத்தகமாக மாத்திரம் இருப்பதில்லை; மாறாக *அது தேவனை அவர் படைத்த மனிதகுலத்துடன் ஐக்கியத்திற்குக் கொண்டுவர வடிவமைக்கப்பட்ட எழுத்துக்களின் வரிசை அமைவை உள்ளடக்கி இருக்கிறது.* அந்த ஐக்கியம் எவ்வாறு சாத்தியமாகிறது என்பதையும் அது காண்பிக்கிறது. வேதாகம எழுத்துக்களின் ஆக்கத்தை ஆழ்ந்து சிந்தித்துப் பாருங்கள். நாம்

வாழ்வதற்கான சட்டங்களை மாத்திரம் கொடுத்தல் என்று தேவன் விருப்ப நோக்கங்கொண்டிருந்தால், வேதாகமமானது இப்போது உள்ள நிலையிலிருந்து குறைந்த பட்சம் பின்வரும் மூன்று வழிகளில் மாறுபட்டிருக்கும்.

முதலாவது, அது இன்னும் பெரிதாக இருந்திருக்கும், எனென்றால் மக்கள் எப்போதாவது செய்யும் *ஒவ்வொரு தனிப்பட்ட விஷயத்திற்கும்* ஒரு சட்டம் தேவையாயிருக்கும். சட்டங்களின் ஒரு பகுதியானது கி.பி. நான்காம் நூற்றாண்டில் வாழ்ந்த மக்களின் வாழ்வில் நடந்த எல்லாவற்றையும் உள்ளடக்கியிருக்கும். இன்னொரு பகுதி, பதினான்காம் நூற்றாண்டில் வாழ்ந்த மக்கள் செய்தவற்றின் மீது கவனம் குவித்திருக்கும், இன்னும் ஒருபகுதி, இருபத்தியோராவது நூற்றாண்டில் வாழும் மக்களுக்கு நடைமுறைப்படுத்தப்படும் சட்டங்களைக் கொண்டிருக்கும். இருபத்து நான்காம் நூற்றாண்டில் வாழப்போகும் மக்களை ஆளுகை செய்வதற்கு இன்னொரு பகுதி தேவையாயிருக்கும்.

மாறுபட்ட கால கட்டங்களுக்கு சட்டங்களைக் கொண்டுள்ள நிலையானது இன்னமும் எல்லாச் சாத்தியக்கூறுகளையும் உள்ளடக்கியிராது. நமது உலகத்தில் உள்ள வேறுபாடுகளைப் பற்றி நினைத்துப் பாருங்கள். கணணிகளின் பரவலான பயன்பாடு மற்றும் மருத்துவத்துறையின் முன்னேற்றங்கள் ஆகியவற்றை ஆளுகை செய்வதற்குப் பலநாடுகளில் சட்டங்கள் தேவைப்படுகின்றன.[2] உலகத்தின் பிற பகுதிகளில் உள்ள மக்கள் தொழில்நுட்ப முன்னேற்றங்கள் பலவற்றைக் கண்டிருக்க மாட்டார்கள். எல்லாக் காலங்களிலும் உள்ள ஒவ்வொரு சூழ்நிலைக்குமான சட்டங்கள் ஒவ்வொன்றையும் வேதாகமம் பட்டியலிட்டு இருக்கும் என்றால், நமக்கு ஒரு புத்தகமல்ல ஆனால் ஒரு நூல்நிலையம் கொள்ளுமளவு புத்தகங்கள் தேவைப்பட்டிருக்கும். ஜேக் P. லூயிஸ் என்பவர், "மக்கள் செய்யக்கூடாத எல்லா விஷயங்களையும் கர்த்தர் பட்டியலிட்டு கொடுத்திருப்பார் என்றால், அவ்வாறு எழுதப்பட்ட புத்தகங்களை நமது நூல் நிலையங்கள் அடக்கிக்கொள்ள இயலாது போயிருக்கும்" என்று கூறினார்.[3]

மேலும், வேதாகமம் வெறும் சட்டப்புத்தகமாக மாத்திரம் இருக்க வேண்டும் என்ற நோக்கம் கொண்டிருந்தால், அது மாறுபட்ட ஒரு வடிவத்தில் இருந்திருக்கும். வேதாகமத்தின் ஒருபகுதியானது சட்டங்கள் மற்றும் விதிகள் ஆகியவற்றின் வடிவத்தில் தரப்பட்டுள்ளது (எல்லாமும் இல்லை என்றாலும், யாத்திராகமம், லேவியராகமம், எண்ணாகமம் மற்றும் உபாகமம் ஆகியவற்றின் ஒரு பகுதி இவ்வாறு உள்ளது). வேதாகமத்தைப் பற்றி மக்களில் சிலர் கொண்டுள்ள கண்ணோட்டத்திற்கு மாறுபட்ட வகையில், அதன் பக்கங்களில் ஒருசில மாத்திரமே அப்படிப்பட்ட சட்டங்களுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டுள்ளன. அதன் பெரும்பகுதியானது எடுத்துரைப்புகள், கவிதை மற்றும் நிருபம் போன்ற இலக்கிய நடைகளில் எழுதப்பட்டுள்ளது. இந்த வடிவங்கள் அவ்வப்போது சில சட்டங்களைக் குறிப்பிடலாம், ஆனால் பொதுவாகப்பேசுவதென்றால் அவைகள் சட்டங்களைப் பட்டியலிடுவதில்லை. தேவன் தமது சித்தத்தை நமக்கு வெளிப்படுத்த, இந்த நடைகளைத் தேர்ந்துகொண்டார் என்ற உண்மையானது, வேதாகமம் எவ்வாறு இருக்க வேண்டும் என்று அவர் நோக்கங்கொண்டிருந்தார் என்பதைப் பற்றிய சில விஷயங்களை நமக்குக் கூறுகின்றன.

கடைசியாக, வேதாகமம் வெறும் சட்டப் புத்தகமாக மாத்திரம் இருக்க நோக்கங்கொண்டு இருந்தது என்றால், அது தேவனை வேறுவகையில் சித்தரித்தி ருக்கும். வேதாகமத்தின் பெரும்பகுதி, நாம் தேவனை ஒரு படர்க்கைக்

கண்ணோக்கில் இருந்து கண்ணோக்க நம்மை அனுமதிக்கிறது. அவர், ஆபிரகாம், யாக்கோபு, மோசே, தாவீது மற்றும் பவுல் ஆகியோருடன் எவ்வாறு உறவுபட்டிருந்தார் என்று நாம் கவனிக்க முடிகிறது. தேவன், எழுதப்பட்ட தமது புத்தகம் வெறும் சட்டப்புத்தகமாக மாத்திரம் இருக்கும்படி நோக்கங் கொண்டிருந்தார் என்றால், அது முழுவதும் பத்துக் கட்டளைகள் போன்றே இருந்திருக்கும் (யாத்திராகமம் 20:1-17, 23-26; உபாகமம் 5:6-21). அவர் தம்மை தன்மைப் பெயரில் குறித்திருப்பார், தாம் செய்துள்ளவற்றைப் பற்றி நமக்கு நினைவூட்டி பின்பு நாம் பின்பற்ற வேண்டிய சட்டங்களைப் பட்டியல் இட்டிருப்பார். அவருடைய வசனம் எப்போதுமே இந்த அணுகுமுறையை மேற்கொள்வதில்லை என்பது, நாம் வேதாகமத்தை எவ்வாறு அணுகவேண்டும் என்பது குறித்த அவருடைய விருப்பநோக்கம் பற்றிச் சில விஷயங்களை வெளிப்படுத்துகிறது.

## முடிவுரை

மனிதர்கள் என்ற வகையில் நாம், பகுத்தறிவுடன் சிந்திக்கக் கூடியவர்களாக இருக்கிறோம், எனவே நாம் எவற்றைப் புரிந்துகொள்ள வேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கிறார் என்பதைப் பகுத்தறியக் கூடியவர்களாக இருக்கிறோம். வேதாகமத்தின் இயல்பில் இருந்து நாம், அது தேவனிடத்தில் இருந்து வந்து வெளிப்படுத்துதல் என்பதைப் பகுத்தறிய முடியும். இந்த வெளிப்படுத்துதலானது, தேவன் தம்மைப்பற்றி நாம் அறிய வேண்டும், தம்முடன் நாம் உறவுபட்டிருக்க வேண்டும் என்று விரும்புகிறார் என்பதை வலியுறுத்தும் வகையில் முன்வைக்கப்பட்டுள்ளது. நாம் தேவனைப் போல் இருக்கத் தேர்ந்துகொள்ளும்போது, இந்த உறவானது உயர்கொள்கையில் வாழப் படுகிறது.

வேதாகமத்தைப் படிப்பதில் "சட்டத்தைக் கண்டறிதல்" என்பது நமது இலக்காக இருப்பதில்லை, ஆனால் நாம் இன்னும் அதிகமாகத் தேவனைப் போல் ஆவதற்கும் அவரது இயல்பு மற்றும் சித்தம் ஆகியவற்றிற்கு இசைவிணக்க மாக வாழ்வதற்கும் கற்றுக்கொள்ள வேண்டியது என்ன என்று கேட்பதே வேதாகமத்தை நாம் படிப்பதற்கான நோக்கமாக உள்ளது. வேதவசனங்களைப் பற்றிய நமது படிப்பு, நம்மையே நாம் கண்டறியும் ஒவ்வொரு சூழ்நிலைக்கும் பொருத்தமான சட்டம் ஒன்றைக் கண்டறிதல் பற்றியதாக இருப்பதில்லை. மாறாக அது, "வரலாற்றின்/கதையின் ஒழுக்கபோதனையை" கண்டறிதலாகவும், எவ்வாறு வாழ்வது என்பது பற்றிச் சரியான முடிவுகளைத் தரவழைத்தலாகவும் உள்ளது. இது, தேவன் வெளிப்படுத்தியுள்ள சத்தியத்தை நாம் கண்டறியவும் மற்றும் அதை ஏற்புடைய வகையில் நடைமுறைப்படுத்தவும் நம்மால் இயலாது என்று அர்த்தப்படுத்துவதில்லை. "எது நமக்கு உண்மையானதாக உள்ளது" என்று காண்பதைத் தேவன் நமக்கு விட்டுவைக்கவில்லை.[4] அவர் சத்தியத்தை வெளிப்படுத்தியிருக்கிறார். நாம் அந்த சத்தியத்தைக் கண்டறிந்து அதனுடன் நமது வாழ்வை ஒப்புமையாக்கிக் கொள்ள வேண்டும் என்று எதிர் பார்க்கப்படுகிறோம்.

குறிப்புகள்

[1]தேவன் நம்முடன் ஒரு உறவு முறையை விரும்புகிறார், அது சட்டங்களின் பட்டியலுக்குக் கீழ்ப்படியும் ஒரு இயந்திர மனிதனைப் போன்றதாக இருக்க அவர் விரும்புவதில்லை. ரோமர் 3:23ல் பாவம் பற்றிய பவுலின் விவரிப்பு - "தேவமகிமையற்றுப் போனோம்" - என்பது தேவனுடைய சட்டங்களை அல்ல ஆனால் அவரது இயல்பை வலியுறுத்துகிறது. நாம் பாவம் செய்யும்போது, தேவனுடைய இயல்புபோல் இருக்கும் பாகங்கள் சிலவற்றில் நாம் குறைவுபட்டுப் போகிறோம். பாவத்தில் இருந்து விடுதலையாகி இருத்தல் என்பது நாம் தேவனுடைய இயல்பில் இருந்தோம் என்பது போன்ற நிலையை அர்த்தப்படுத்தும். எனவே பாவத்தை வெற்றிகொள்வதற்கு மக்கள் தேவனைப் பற்றி அறியவும் அவரைப் போல் இருக்கவும் வேண்டும் என்பதைத் தேவன் தமது இலக்காகக் கொண்டிருப்பார் என்பது கருத்தறிவை ஏற்படுத்துவதாக உள்ளது. [2]தொலைக்காட்சி கேபிள் நிகழ்ச்சிகள் புதியதாக தொடங்கியபோது, எனது நண்பர் ஒருவர், "பிரீமியம்" சேனல்களை அவற்றிற்கான கட்டணம் செலுத்தாமலேயே பெற முடியும் என்பதைத் தற்செயலாகக் கண்டறிந்தார். கேபிள் கம்பெனியானது, அவர் அவ்வாறுசெய்தலை விரும்புவதில்லை என்றாலும், அவரது செயலில் சட்டவிரோதமான காரியம் ஒன்றும் இல்லை என்று அந்தக் கம்பெனியே தெரிவித்தது. (இதைப் பற்றி இப்போது சட்டங்கள் இறுக்கமாக அமைக்கப்பட்டுள்ளன.) "பிரீமியம் கேபிள் சேனல்களை விலைகொடாது பெறாதிருப்பாயாக'' என்று வெளிப்படையான வேதாகமக் கூற்று இல்லை என்றாலும்கூட, இவ்வாறு செய்தலானது களவு செய்தலுக்கு எதிரான தேவனுடைய ஒழுக்க விதியின் கொள்கையை மீறுதலாக இருக்கும். [3]Quoted in Cecil May, Jr., "Instrumental Music: Faith or Opinion," *Freed-Hardeman University Preachers and Church Workers Forum* (1991): 17. [4]"நவீனத்துவத்திற்கு அடுத்த கொள்கை" என்று அழைக்கப்படும் இந்தத் தத்துவம் அடிப்படையில் சார்பளவியமாக உள்ளது - இது சத்தியமானது நபருக்கு நபர் மாறுகிறது, மற்றும் அது மாறுபட்ட காலங்கள் மற்றும் சூழ்நிலைகளைச் சார்ந்துள்ளது என்ற கண்ணோட்டமாகும். சார்பளவுத் தத்துவவாதி, ஒவ்வொரு காலத்தி லும் சூழ்நிலையிலும் எதுவும் எப்போதும் உண்மையாக இருப்பதில்லை என்ற ஒரே விஷயம் தான் ஒவ்வொரு காலத்திலும் சூழ்நிலையிலும் உண்மையாக உள்ள ஒரே விஷயமாகும் என்று உரிமைகோருகிறார். இது தன்னிலேயே முரண்படுகிற மதியீன மான கூற்றாக உள்ளது. "எனக்கு அர்த்தப்படுகிற" சிலவற்றைப் பற்றிப் பேசுதல் என்பது, வசனப்பகுதியொன்றின் அர்த்தமானது முற்றிலும் பொருள்சார் வகையானது அதற்கு நேர் எதிரானதாகவும் அர்த்தப்படலாம், இருப்பினும் அவை இரண்டுமே சரியானவை என்பதாகிறது. இதுவும் மதியீனமானதாகவே உள்ளது. ஒவ்வொரு விஷயத்திற்கு நாம் ஒரு *விதியைக்* கொண்டிருப்பதில்லை என்று கூறுதலானது, ஒவ்வொரு விஷயத்தைப் பற்றியும் நாம் சத்தியத்தைக் கொண்டிருப்பதில்லை என்று கூறுவதாகாது. சத்தியமானது வெளிப்படுத்தப்பட்டுள்ளது மற்றும் அது நபருக்கு நபர் மாறுபடுவதில்லை என்பதில் நாம் உறுதியாயிருக்க முடியும். சத்தியத்தை நாம் முறையாகப் புரிந்துகொண்டால், உங்களுக்கு உண்மையானது எதுவோ அது எனக்கும் உண்மையாக இருக்கிறது என்பதை நாம் அறிவோம்.

## இரட்சிப்பிற்குக் கர்த்தருடைய திட்டம்

சீஷராகக் கூடியவருக்கு இயேசு, ''என்னை உன் இருதயத்தில் வரவேற்றுக்கொள் அது போதும்" என்றோ அல்லது "பாவிகளின் ஜெபத்தைக் கூறு'' என்றோ ஒருக்காலும் கூறவில்லை. அதற்குப் பதிலாக, "இயேசுவின்

அழைப்பானது எப்போதுமே செயல்பாட்டிற்கானதாக, உடனடியான மற்றும் தொடர்ச்சியான கீழ்ப்படிதலுக்கானதாக இருக்கிறது …”[1] ஆண்டவரும் கிறிஸ்துவும் என்ற வகையில் (நடபடிகள் 2:36) இயேசு, இரட்சிக்கப்பட என்ன செய்ய வேண்டும் என்று நமக்குக் கூறும் உரிமையைக் கொண்டுள்ளார். என்ன செய்யும்படி அவர் கூறியுள்ளார்?

முதலாவது *நாம் அவரில் விசுவாசம் கொள்ள வேண்டும்.* மாற்கு 16:16ல் இயேசு, “விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்” என்று கூறினார். (மேலும் காண்க யோவான் 3:16; 8:24.) இரண்டாவது, *நாம் மனந்திரும்ப வேண்டும்* அல்லது மாற வேண்டும். மனந்திரும்புதல் என்பது நமது பாவங்களுக்காக வருந்துதலுடன் தொடங்குகிறது, ஆனால் அது நமது பாவம் நிறைந்த உலகத்தில் இருந்து வெளியேறி இன்னும் அதிகமாய் இயேசுவைப் போல் வாழுதலை விளைவிக்கிறது. “மனந்திரும்புங்கள், பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது” என்பது இயேசுவின் முதல் மற்றும் மையப் போதனையாக இருந்தது (மத்தேயு 4:17). பெந்தெகொஸ்தே *நாளன்று* கூடியிருந்து பேதுரு பிரசங்கித்ததைக் கேட்டுக் கொண்டிருந்தவர்கள், கிறிஸ்துவைக் கொன்ற தாங்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டு, என்ன செய்யவேண்டும் என்று கேட்டபோது, அவர்களிடத்தில் பேதுரு, “நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று, இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞனஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள்” என்று கூறினார் (நடபடிகள் 2:38). மூன்றாவது, நாம் இயேசுவுக்காக வெளிப்படையாக நிற்க மனவிருப்பமாக இருக்க வேண்டும். அவர், “மனுஷர் முன்பாக என்னை அறிக்கை பண்ணுகிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக அறிக்கை பண்ணுவேன். மனுஷர் முன்பாக என்னை மறுதலிக்கிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக மறுதலிப்பேன்” என்று கூறினார் (மத்தேயு 10:32, 33; மேலும் காண்க ரோமர் 10:9, 10). நிறைவாக நாம், இரட்சிக்கப்பட்டவர்கள் என்று எண்ணப்படுவதற்கு முன், நாம் நம்மை ஞானஸ்நானத்திற்கு அல்லது முழுக்காட்டுதலுக்குக் கீழ்ப்படுத்த வேண்டும் (மாற்கு 16:16). மத்தேயு 28:19ம் வசனம், “பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்தல்” என்பது “சீஷராக்குதல்” என்பதன் பாகமாக உள்ளது என்று காண்பிக்கிறது.

இயேசுவில் விசுவாசம் கொண்டுள்ளதாக உரிமைகோரும் ஒவ்வொருவரும் இந்த விஷயங்களைப் போதிப்பதில்லை; ஆனால் இயேசு, “நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்” என்று கூறினார் (யோவான் 14:15). அது இரட்சிக்கப்பட்டவர்களின் கூட்டத்தில் பாகமாவதற்கு அவர் கொடுத்த கட்டளைகளையும் உள்ளடக்குகிறது. நீங்கள் அவருக்குக் கீழ்ப்படிந்து இருக்கிறீர்களா?

---

குறிப்பு

[1]Cecil May, Jr. “Casual Seekers at the Narrow Gate,” *Preacher Talk* 20 (July 2004): 3.